முருகப்பெருமான் துணை

இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 708**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

06.09.2021, திங்கட்கிழமை

1. தவவேள்வி கொண்ட ஆறுமுக அரங்கனே
தர்மமாகவே வாழுகின்ற ஞான தேசிகனே
அவனியை காத்தே தீருவேன் என
அவதாரம் என்சக்தியாக வந்து செயல்படுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
வரங்கள்கூடி என்சக்தியால் அரங்கன் உன்வழி
வையகமே பெருமாற்றம் காணக்கூடும்
3. கூடுகின்ற தொண்டர்படைகள் மூலமே
குருராஜன் உன்கொள்கை உலகமெல்லாம் பரவி
நாடெங்கிலும் சுத்தசன்மார்க்கமும் அன்னதானசேவையும்
நன்மைபுரியும்படி அற்புதங்கள் நடத்தி
4. நடத்தியே அரங்கன் நீ விரும்புகின்ற வண்ணம்
ஞானபூமியாக இந்தஉலகம் மாறும்
மாறுதலை செய்து மாதவசி நீவந்த நோக்கத்தை
மகான் சுப்ரமணியர் யானும் பூர்த்திசெய்வேன்
5. ஆறுதலாக உந்தனுக்கு நித்தம்நித்தம்
ஆற்றல்கூட்டி அரங்கா நீ உலகோரை காக்கவேண்டும்
வந்தநோக்கம் பூர்த்தி செய்து
உலகில் நவகோடி ஞானியர்களை உருவாக்கவேண்டும்என
6. ஆறுமுகன் யான் சூட்சுமமாகவும்
பல்வேறு மகாசக்தியாகவும் உன்னுள் இணைந்துள்ளேன்
உள்ளபடி நீயே கலியுகத்தின் சிறந்த ஞானி
உயர்வான அருட்பிரகாச வள்ளலுக்கு பிறகு
7. தாயாக உலகோர்க்கு தயவாக வாழுகின்ற
தயாபரன் நீயேநீயே என்று அரங்கமகான் தனக்கு
நிலமதனில் சுப்ரமணியப்பெருமான் தந்தருளிய
ஞான அறிவுரைஆசி விளக்கம் முற்றே

–சுபம்–